# ‘ஸ்டாலின்’ என்றால் ‘Man of Steel’ என்று பொருள்!

# எஃகு கொண்ட உறுதியுடன் இலக்குகளில் வெற்றி பெறுவேன்!

## ஓசூர் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

அது என்னவென்றால், “M.o.U எல்லாம் செயல்பாட்டிற்கு வர வேண்டும். அந்த Conversionஇல் Focus செய்யுங்கள்! அந்த Process நம்முடைய அரசாங்கத்தில் வேகமாக நடக்க வேண்டும் என்று சொல்வேன்.

**மகிழ்ச்சியுடன் உங்களிடம் சொல்கிறேன்... நாங்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 77 சதவீதம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு வந்திருக்கிறது! எங்களுடைய குறிக்கோள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டும்! அதைத்தான் செய்து காட்டிக் கொண்டு இருக்கிறோம்.**

கடந்த 4 ஆண்டுகளில், இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு பெரும் தொழில் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் ஓசூர் பார்த்து வருகிறது. ஓசூர் உட்பட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏராளமான புதிய தொழிற்சாலைகள் இந்த நான்காண்டு காலத்தில் கொண்டுவந்திருக்கிறோம். ஒரு காலத்தில், “சிறிய தொழில் நகரம்” என்று சொல்லப்பட்ட ஓசூர், இன்று பல கம்பெனிகளுக்கு ‘Favourite Destination’ஆக உருவெடுத்திருக்கிறது.

**கிருஷ்ணகிரிக்கும் - ஓசூருக்கும் தமிழ்நாடு அரசின் சாதனைகள்!**

இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் - ஓசூருக்கும் தமிழ்நாடு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று சொல்ல வேண்டும் என்றால்,

**முதலில்** இந்த கிருஷ்ணகிரி மாவட் டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 1 இலட்சம் M.S.M.E. நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. ஓசூர் தொழில் வளர்ச்சிக்காக நாம் செய்ததில் முக்கியமானது ‘சிப்காட்’ தொழில் பூங்கா.

2 ஆயிரத்து 92 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கும் ஓசூர் சிப்காட்டில், 371 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

**இரண்டாவது;** சிறப்பான உள்கட்டமைப்புகளுடன் அமைக்கப் பட்டிருக்கும் இந்தத் தொழிற் பூங்காவில், தடையில்லாமல் நீர் வழங்க T.T.R.O. நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**மூன்றாவது;** சிப்காட் நிறுவனம் FORT இன்குபேட்டர்கள் அமைத்திருக்கிறது. இந்த இன்குபேட்டர், தொழில்துறை மாற்றத்தை விரைவுபடுத்தும் நோக்கில் செயல்படுகிறது.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் ஓசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 1,210 கோடி ரூபாய் முதலீட்டில் 7,900 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 4 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

**நான்காவது;** சூளகிரி பகுதியில் 689 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் பூங்கா.

**ஐந்தாவது;** பர்கூரில் ஆயிரத்து 379 ஏக்கர் பரப்பளவில் சிறப்பு பொருளாதார மண்டலத்துடன் கூடிய தொழில் பூங்கா.

**ஆறாவது;** குருபரப்பள்ளியில் 150 ஏக்கரில் தொழில் பூங்கா ஆகிய தொழில் பூங்காக்களை ‘சிப்காட்’ நிறுவனம் நிறுவி இருக்கிறது.

**அடுத்து, ஏழாவதாக** - இன்றைக்குத் திறந்திருக்கும் ஃபியூச்சர் மொபிலிட்டி பார்க்! 210 கோடி ரூபாய் மதிப்பில், 300 ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கும் இந்தப் பூங்காவில், இதுவரை, 22 நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2 ஆயிரத்து 728 கோடி ரூபாய் உறுதியளிக்கப்பட்ட முதலீடு பெறப்பட்டிருக்கிறது. 6 ஆயிரத்து 682 நபர்களுக்கு, ‘உறுதியளிக்கப்பட்ட வேலை வாய்ப்புகள்’ உருவாக்கப் பட இருக்கிறது.

**எட்டாவது;** தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில் டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ‘டிட்கோ’வுடன் இணைந்து, விடியல் ரெசிடென்சி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் மூலமாக பணியாளர்கள் தங்க, 64 ஏக்கரில் தொழிலாளர் குடியிருப்பு கட்டி வருகிறார்கள். முதற்கட்டமாக 6 ஆயிரம் பேர் தங்கும் வகையில் கட்டி முடிக்கப்பட்டு, பயன்பாட்டில் இருக்கிறது. இதன் மூலமாக, பணிபுரியும் மகளிர் பாதுகாப்பும் வசதியும் உறுதி செய்யப் பட்டிருக்கிறது. பணிபுரியும் மகளிர் எண்ணிக்கையும் இதனால் வெகுவாக அதிகரிக்கும்.

**அடுத்து ஒன்பதாவதாக;** G.C.C.கள், I.T. நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் உயர்தர ஆராய்ச்சி மையங்கள் ஆகியவற்றிற்கான மையமாக ஓசூரை உருவாக்க ஓசூர் ‘Knowledge Corridor’ உருவாக்கப் போகிறோம்.

கிருஷ்ணகிரி பாகலூர் புறவழிச்சாலை, வெளிவட்டச் சாலை மற்றும் சாட்டிலைட் டவுன் ரிங் ரோடு வடக்குப் பகுதி ஆகிய சாலைகளின் இரு புறங்களிலும் இந்த அறிவுசார் வழித்தடத் திட்டத்தைச் செயல்படுத்தப் போகிறோம். இதன்மூலமாக, ‘அறிவுசார் பொருளாதாரம்’ பெருமளவில் அதிகரிக்கும், இந்த மாவட்டத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி நன்கு மேம்படும்.

**பத்தாவதாக ;** ஓசூரில், 5 இலட்சம் சதுர அடியில், 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ‘டைடல்’ பார்க் நிறுவப்படுகிறது. உலகத்தரம் வாய்ந்த இந்த I.T. பார்க்கில், I.T. நிறுவனங்கள், GCCகள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் ஈர்க்கப்பட்டு, கிட்டத்தட்ட 6 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாகும்.

### தமிழ்நாட்டின் வளர்ச்சியை உலகிற்குப் பறைசாற்றும் வகையில் - அக். 9,10 தேதிகளில் –

## கோவையில் ‘உலக புத்தொழில்’ மாநாடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**“MSME துறை சார்பில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், அக்டோபர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில், கோயம்புத்தூரில் ஒரு உலக புத்தொழில் மாநாட்டை நடத்த இருக்கிறது. இந்த மாநாடு உலகம் முழுவதுமிருந்து தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், இன்குபேட்டர்கள், புத்தொழில் முனைவோர் ஆகியோரை ஒருங்கிணைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமையும்.**

**ஸ்டார்ட்அப் செக்டாரில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்த மாநாடு உலகிற்குப் பறைசாற்றும்!”**

### தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில், நமது சாதனைகளை நாமே முறியடிக்கிறோம்!

**பதினொன்றாவதாக** - இவை எல்லாவற்றிற்கும், ஓசூர் விமான நிலையத்தை உருவாக்க முக்கியத்துவம் தருகிறோம். “ஓசூரில் சுமார் 2 ஆயிரம் ஏக்கரில் உலகத்தரம் வாய்ந்த அதிநவீன கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப்படும்” என்று ஏற்கனவே நான் அறிவித்திருந்தேன். இந்த புதிய விமான நிலையத்தை அமைக்க, ஓசூர் பகுதியைச் சுற்றியிருக்கும் பொருத்தமான நிலப் பகுதி அடையாளம் காணப்பட்டு, அதைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை டிட்கோ நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பன்னாட்டு விமான நிலையம், மற்றுமொரு புதிய வளர்ச்சிப் பாதையில் ஓசூரைப் பயணிக்க வைக்கும்.

**ஓசூரை நோக்கி சாரை சாரையாக வரும் தொழிற்சாலைகள்!**

இப்போது நான் பட்டியலிட்ட பதினொன்று மட்டுமல்ல. பல தொழில்துறை சார்ந்து மட்டுமே, இவ்வளவு வேலைகளை கிருஷ்ணகிரிக்காக அதுவும் ஓசூருக்காகச் செய்து வருகிறோம். அதனால்தான் மற்ற மாநிலங்களை Challenge செய்யும் நகரமாக ஓசூர் இன்றைக்கு Develop ஆகியிருக்கிறது. சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கும், தன்னம்பிக்கையோடு முன்னேறும் மகளிருக்கும், ஒரு வலுவான மேடையை வழங்கி வருகிறோம். தொழிற்சாலைகள், ஓசூரை நோக்கி தொடர்ந்து சாரைசாரையாக வருகிறார்கள்!

இன்று, ‘இ’ஸ்கூட்டர் உற்பத்தியின் தலைநகராகவும் ஓசூர்தான் இருக்கிறது! இதன் தொடர்ச்சியாக இந்த மாநாடு, ஓசூரின் அடுத்தகட்ட உயர்வுக்கான கதவுகளைத் திறக்கும்! நான் அதை தொடர்ந்து கண்காணிப்பேன்.

**ஸ்டாலின் என்ற பெயருக்கு ‘Man of Steel’ என்று பொருள்! உறுதியோடு சொல்கிறேன்; எஃகு போன்ற உறுதியுடன் என்னுடைய இலக்குகளில் வெற்றி பெறுவேன்!**

எங்கள் அரசு மேல் நீங்கள் நம்பிக்கை வைத்து, முதலீடு செய்ய வந்திருக்கும் உங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை நிச்சயமாக நாங்கள் வழங்கக் காத்திருக்கிறோம். வழங்குவோம். தமிழ்நாட்டுடன் இணைந்து பயணம் செய்தால் கண்டிப்பாக வெற்றிதான்!

**நாளைய தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நல்லுதாரணம்!**

அதனால் எப்போதும் உங்கள் முதலீடுகளை நம்முடைய தமிழ்நாட்டிலேயே மேற்கொள்ளுங்கள்! கடந்த மாநாட்டிலும் நான் சொன்னேன்... “Tamil Nadu Rising மட்டுமல்ல. “Tamil Nadu will keep on Rising - என்று சொன்னேன்.” நாளைய தமிழ்நாடு, வளர்ச்சிக்கு நல்லுதாரணமாக உலகத்திற்கு தன்னை வெளிப்படுத்தியிருக்கும் இந்தச் சிறப்பான மேடையில் இருந்து ஒரு அறிவிப்பைச் செய்ய நினைக்கிறேன்.

**MSME துறை சார்பில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், அக்டோபர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில், கோயம்புத்தூரில் ஒரு உலக புத்தொழில் மாநாட்டை நடத்த இருக்கிறது. இந்த மாநாடு உலகம் முழுவதுமிருந்து தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், இன்குபேட்டர்கள், புத்தொழில் முனைவோர் ஆகியோரை ஒருங்கிணைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக அமையும்.**

ஸ்டார்ட்அப் செக்டாரில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்த மாநாடு உலகிற்குப் பறைசாற்றும்!

**தமிழ்நாட்டின் முன்னேற்றம் நிச்சயம்!**

அந்த நிகழ்விற்கும் உங்களை எல்லாம் வரவேற்க நான் காத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் முன்னேற்றம் நிச்சயம்! தமிழ்நாடு முன்னேற உங்கள் பங்களிப்பு எந்நாளும் அவசியம்! என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## 4 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதம் வெகுவாக குறைவு!

### நாட்டிலேயே தமிழ்நாடு 3ம் இடத்திற்கு முன்னேற்றம்!

*சென்னை, செப். 12 -*

*திராவிட மாடல் ஆட்சியில் மகப்பேறு இறப்பு விகிதம் கடந்த 4 ஆண்டுகளில் வெகுவாக குறைந்து நாட்டிலேயே தமிழ்நாடு 3ம் இடத்திற்கு முன்னேறி உள்ளது.*

*ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள மகப்பேறு இறப்பு விகிதம் தொடர்பான புள்ளி விவரங்களின் படி,*

*தமிழ்நாட்டின் 2021 - 2023 காலகட்டத்தில் மகப்பேறு மரண விகிதம் ஒரு லட்சம் மகப்பேறுக்கு 35 ஆக குறைந்துள்ளது.*

*2021 காலகட்டத்தில் இந்த இறப்பு விகிதம் 38 ஆக இருந்தது.*

*இந்திய அளவில் மகப்பேறு மரணம் ஒரு லட்சத்திற்கு 88 ஆக உள்ளது.*

*தமிழ்நாட்டில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வர மக்கள் நல்வாழ்வுத்துறை சிறப்பு கவனம் செலுத்தி வருகிறது.*

*கர்ப்பிணிகள், குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து, பிரசவகாலம் வரை கர்ப்பிணிகளின் மருத்துவ பரிசோதனைகளை தொடர்ந்து கண்காணித்தல், குழந்தை பராமரிப்பு, தாய்ப்பாலின் முக்கியத்துவம், மலைக்கிராமங்களில் கூடுதல் மருத்துவர்களை பணியமர்த்துதல் உள்ளிட்ட சேவைகளை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.*

*இதன் மூலம் மகப்பேறு இறப்பு விகிதத்தை தமிழ்நாடு வெகுவாக குறைத்து நாட்டிலேயே 3வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.*


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 153 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Supply of knife edge gate valve with power cylinder assembly |
| 158 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Procurement of NB 100mm SS316 Gate Valve Short Bend Pipeline and Flange for Unit I and II |
| 209 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | Impeller assembly suitable for CWP in Unit-III |
| 211 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | Supply of 200 NB and 150 NB seamless pipes for fire hydrant lines of ICHS coal yard |
| 212 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | Procurement of 150 NB Seamless pipes for ECHS yard conveyor fire hydrant line |
| 213 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | NUMERICAL OVER CURRENT PROTECTION RELAYS FOR LT SWITCHGEAR FEEDERS |
| 214 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 1 | Burner Tilt Cylinder With Accessories Pneumatic Power Cylinder |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

**செ.ம.தொ.இ/5045/ஒப்பந்தப்புள்ளி/2025**


### முதல்வரின் மருமகன்

## சபரீசனின் தந்தையார் எஸ்.வேதமூர்த்தி மறைவு!


### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்! இன்று இறுதிச் சடங்குகள்!

**சென்னை, செப்.12-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சம்பந்தியும், மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையாருமான எஸ்.வேதமூர்த்தி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னாரின் மறைவுக்கு தமது இரங்கலைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “வேதமூர்த்தி அவர்களின் மறைவு, ஒட்டு மொத்தக் குடும்பத்திற்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

வேதமூர்த்தி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-



எனது மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையார் வேதமூர்த்தி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

வேதமூர்த்தி அவர்களின் மறைவு ஒட்டுமொத்தக் குடும்பதிற்குமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தந்தையை இழந்து வாடும் சபரீசன் அவர்களுக்கும், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த வேதமூர்த்தி அவர்களின் உடல், கொட்டிவாக்கம் கிழக்கு, ஏ.ஜி.எஸ். காலனி, இரண்டாவது குறுக்கு தெரு, பிளாட் எண். சி 15 என்ற முகவரியில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாருக்கு இன்று (12.9.2025) மாலை 3.00 மணியளவில் சென்னை, பெசன்ட் நகர் மின் மயானத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்படும்.